62. சந்தோஷம்

நண்பர் ரகுவைப் பார்த்து வெகு நாளாகிவிட்டது. வந்ததும் முதலில் எனக்கு அடையாளமே புரியவில்லை. "யாரு?" என்றே கேட்டுவிட்டேன்.

"அப்படித்தானே கேட்கத்தோன்றும்" என்று சொல்லிக் கொண்டே யார் என்று தெரிவிக்காமலே எதிரில் இருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தவனை உறுத்துப்பார்த்தேன்.

"இன்னமும் தெரியவில்லையே!" என்று நான் பரிதவிக்கிற குரலில் கேட்டபிறகுதான் நிஜமாகவே தெரியவில்லை என்று ரகுவுக்கும் தெரிந்தது போலும். "ரகுதான் ரகுவேதான்" ரெண்டு வருஷம் முழுசாக ஆறதுக்குள்ளே யாரு என்று கேட்கிற அளவுக்கு ஆளையே மறந்துவிட்டாயே.... அடாடா!"

"ரகுவா? ரகுவா? ரகுவா? வா வா வா. எப்போ வந்தே? சென்னையிலிருந்துதான் வரயா? உத்தியோகம் எல்லாம் எப்படியிருக்கு? எத்தனை நாள் லீவு? உன் சம்சாரமும் வந்திருக் கிறாளா?" என்று வரிசையாகக் கேள்விகளைக் கேட்டேன்.

"அதற்கெல்லாம் பதில் சொல்லவேண்டிய அவசியமே கிடையாது ராஜா. வந்துட்டேன் திரும்ப. இப்பசத்தியாக அதுதான் விஷயம். முதல்லே ஒரு டம்ளர் குளிர்ந்த ஜலம் கொடு. பிறகு... உன்யோக க்ஷேமத்தையெல்லாம் சொல்லு" என்றான் ரகு.

இப்படி நான் கேள்விகளுக்குமேல் கேள்வி கேட்பது ரகு பதிலே தராமல் என் யோக க்ஷேமத்தை விசாரிப்பதும் வெகுநாளைய சங்கதிகள். ஒரு இரண்டு ஆண்டுகளாகத்தான் அவன் சாத்தனூர் விட்டுச் சென்னைக்குப் போய் உத்தியோகம் ஏற்றுக் கொண்டபின் மறந்துவிட்ட விஷயங்கள். அறையில் ஒரு மூலையில் இருந்த மண் கூஜாவிலிருந்து ஒரு டம்ளர் தண்ணீர் எடுத்துக் கொடுத்துக் கொண்டே என் யோக க்ஷேமத்துக்கென்ன? எப்போதும் போலத்தான்" என்றேன்.

"அப்பா சம்பாதித்து வைத்த சொத்திருக்கு. உன் யோக க்ஷேமம் இப்படியே இருக்கலாம். எனக்கெல்லாம் கட்டிவருமா?" என்றான் ரகு.

"படிப்பை ஒரு வழியாகப் படித்து முடித்துவிட்டுக் கை நிறையச் சம்பளம் வாங்குகிற உத்தியோகத்துக்கும் போயாகி விட்டது. இனி என்ன கவலை உனக்கு? என்னைப் பார்த்து நீ பொறாமைப்பட வேண்டியதென்ன? சந்தோஷமாகத் தானே இருக்கே ஆனால் ஆனால்..." என்று தயங்கினேன்.

"ஆனால் என்ன சொல்லேன் அதையும்தான் கேட்போம்."

"முகத்திலே சந்தோஷத்துக்கான அறிகுறியே காணவில்லையே. இந்த இரண்டு வருஷத்திலே இருபது வயது அதிகம் ஆகிவிட்டது போலத் தோன்றதே!" என்றேன்.

"ராஜா கெட்டிக்காரன் தான்" என்றான் ரகு.

"என் கெட்டிக்காரத்தனமெல்லாம் சர்வகலாசாலை பரீட்சையில் முதல் கிளாஸில் பாஸ் செய்ததோடு முடிந்துவிட்டது. இனிமேல் என் கெட்டிக்காரத்தனம் எதோடு சேத்தி? உன் விஷயத்தை யெல்லாம் சொல்லப்பா என்றால் என் விஷயத்தையே கிளறுகிறாயே!" என்றேன்.

"அதான் நீயே சொல்லிவிட்டியே. பார்த்தவுடனே அந்த இரண்டு வருஷ சம்சாரத்தில் எனக்கு இருபது வயது அதிகம் ஆகிவிட்டமாதிரித்தான் இருக்கிறது. சுருக்கமாக அதுதான் விஷயம்".

"சென்னை வாழ்வும் உத்தியோகமும் சொரத்தாக இல்லை யாக்கும்! ஏன்? உன்னாலா? உன் சம்சாரத்தினாலா? உன்னாலிருக்க முடியாது என்று எனக்கு ஓரளவு நிச்சயமுண்டு"

"இரண்டு பேராலும் இல்லை. எனினும் வாழ்க்கை சுரத்தாக இல்லை. அதுதான் விஷயம். கொஞ்சம் ஏதாவது மாறுதல் இருந்தால் இது இரண்டு பேருக்குமே ஏதாவது சொரத்துப் பிறக்குமோ பார்க்கலாமே என்றுதான் பத்து நாள் லீவு எடுத்துக் கொண்டு வந்தேன்" என்றான் ரகு.

"லீவில்-பத்து நாள் லீவில் வந்திருக்கிறாயா? நல்லது,

சாத்தனூரில் அத்தை வீட்டிலே தானே! அதுவும் நல்லது. உன் மனைவியையும் அழைத்து வந்திருக்கிறாய் அல்லவா? அதுதான் நல்லது".

"நான் சொன்ன ஒரு சிறு விஷயத்திலிருந்து இவ்வளவையும் கிரகிக்கக்கூடிய உன்னைக் கெட்டிக்காரன் என்று சொல்லாமல் என்ன சொல்வது?" என்றான்.

"நீயும் இந்தக் கெட்டிக்காரத்தனத்தில் அப்படி ஒன்றும் குறைந்தவனல்லவே ரகு. இத்தனையையும் நான் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தானே ரத்தினச் சுருக்கமாக அவசியமான விஷயத்தை மட்டும் சொன்னாய்?"

"இரண்டு வருஷங்களில் காணாத சந்தோஷம் உன்னோடு பேசிக் கொண்டிருந்த இந்தப் பத்து நிமிஷத்திலேயே மீண்டும் எனக்குக் கிடைத்துவிட்ட மாதிரி இருக்கிறது"

சந்தோஷத்தில் எத்தனையோ வகைகள் உண்டு. பழக்கப்பட்ட சிநேகிதனுடன் மிதமான அளவில் வார்த்தைகளை உபயோகித்து அளவளாவுவது ஒரு சந்தோஷம். ஆனால் அதுவும் பழகிய நண்பனைப் போலவே கட்டிய மனைவியும் இருக்கவேண்டும் என்று எண்ணினால் அது சந்தோஷப் படாதிருப்பதற்குத்தான் வழி" என்றேன்.

"அதையேதான் என் சம்சாரமும் சொல்கிறாள்."

"என்ன சொல்கிறாள் என்று சரியாகச் சொல்லு."

"ராஜா ராஜா என்றால் அவரையே கலியாணம் பண்ணிக் கொண்டிருக்கக் கூடாதோ என்று சொல்கிறாள்."

"நீ ராஜா, ராஜா என்று சொல்லியிருந்தால், அப்படிக் கேட்ட அந்தப் பெண் சொல்லக் காரணம் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும்".

"கெட்டிக்காரிதான். அதில் சந்தேகம் ஒன்றுமில்லை. அதைக் கண்டுதானே காதல் என்று கட்டிக் கொண்டேன்".

"உன் மனைவியின் கெட்டிக்காரத்தனம் உன்னளவில் பிரயோசனப்படவில்லை. அவளளவில்தான் பிரயோசனப்படுகிறது

என்கிறாயா? அதுதான் உன் சந்தோஷமின்மைக்குக் காரணமா?"

ரகு சற்றுத் தயங்கினான். "நான் ஸைகோஅனலிஸ்டைத் தேடிவரவல்லை. காரணம், காரியம் என்று எதுவும் சொல்லத் தெரியவில்லை எனக்கு. இன்று இத்தோடு நிறுத்திக் கொள்வோம். நாளைக்கு நீயேதான் அவளைப் பார்க்கப் போகிறாயே. நீயே எப்படி என்ன என்று தெரிந்து கொள்வாய். ஆனால் ஒன்று, வருஷம் இரண்டாகிவிட்டது என்றாலும் நான் சென்னை சென்றவுடன் கல்யாணக் கடிதாசு அனுப்பினேனே வருவதற்கென்ன? நீ வராதது எனக்கு மிகவும் வருத்தமாகவே இருந்தது. அவள் ஸ்ரீமதி கட்சி சொல்லிச் சொல்லிக் காட்டினாள்."

"என்னைப் பற்றி அவ்வளவு அதிகமாகக் கல்யாணத்துக்கு முந்தியும்கூட நீ அவளிடம் சொல்லியிருக்கிறாய்-அப்பாவி!"

"உண்மைதான்! என் பிசகுதான் அது."

"ஒரு பிசகா-நீ பல பிசகுகள் செய்திருக்கிறாய் என்று தெரிகிறது" என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும்போது "ஸார் ஸார் அம்மா வந்து...." என்று ஏதோ வாசலிலிருந்து சொல்லிக் கொண்டே உள்கூடத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த எங்களை நோக்கி வந்தாள் மீனு. அவசரமாக வந்த மீனு வழக்கத்துக்கு விரோதமாக என்னோடு வேறு யாரோ வந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் சொல்ல வந்ததைச் சொல்லாமல் வெட்கத்துடன் தயங்கி முதல் அங்கணத்திலேயே நின்றுவிட்டாள்.

"சொல்லம்மா மீனா.... சும்மா என்று சொல்லி ஏதோ நிறுத்தி விட்டாயே. இது என் நண்பன் ரகு சென்னையில் வேலையி லிருக்கிறான். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு பத்துநாள் லீவில் வந்திருக்கிறான். மாடி வீட்டு மங்களப்பாட்டியில்லை- மங்களப் பாட்டி அவள் மருமான்."

வந்த மீனாவின் தயக்கம் தீரவேண்டும் என்பதற்காகவேதான் பேசிக்கொண்டிருந்தேன். மீனாவின் தயக்கம் தீரவில்லை. மென்று விழுங்கிக்கொண்டே "உங்ககிட்டே அம்மா தனியாக...."

"பணம் வேண்டுமென்று கேட்டாளே அதுதானே. வாங்கிக் கொண்டு வந்து வைத்திருக்கிறேன். இரு இரு எடுத்துத் தருகிறேன்" என்று காமிரா அறைக்குள் போய் டிராயரைத் திறந்து ஐம்பது ரூபாய்

பணத்தை அவளிடம் தந்தேன். "ஐம்பது ரூபாய் இருக்கிறது போதாது என்றால் மேலும் வாங்கித்தரேன். ஐம்பதுதான் கேட்டாள் அம்மா. கொண்டு போய்க் கொடு" என்றேன்.

"தாங்ஸ்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள் மீனு.

அதுவரையில் பேசாதிருந்த ரகு "யாரப்பா இது இந்த அப்ஸரஸ்? சாத்தனூருக்குப் புதுசு போலிருக்கே!" என்றான்.

மீனாவை அவன் அப்ஸரஸ் என்று விவரித்தது சரிதான். அதில் தவறு ஒன்றுமில்லை. நல்ல அழகு தானே மீனா. வயது பதினெட்டுத்தான் இருக்கும். அவள் முகத்தையே நாள் பூராவும் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவ்வளவு...

"இந்தப் பெண்ணின் முகத்திலே என்ன சந்தோஷக் களை கூத்தாடுகிறது! நாள் பூராவும் இந்த முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கலாமே! பார்க்காத நேரத்திலே கூட இந்த முகத்தின் நினைவே பார்த்தவனுக்குச் சந்தோஷத்தை அளிக்குமே" என்றான் ரகு.

"ஏதேது. ரகு கூட ஒரு காலத்தில் கவியாகிவிடுவான் போல் இருக்கிறது."

"அது இந்த-மீனுவா அவள் பெயர்-அவள் முக அழகு" என்றான் ரகு.

நான் பேசாதிருந்தேன்.

"இப்படி நீ பேசாதிருப்பதே ஆச்சரியமாயிருக்கிறதே! அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் ஆகவில்லை என்று தெரிகிறது. ஏதாவது..."

"இப்படியே நீ பேசிக் கொண்டே போனாயானால் ஸ்ரீமதி நாளைக்கு உன்னை மண்டகப்படி செய்யத் தொடங்கினாலும் தொடங்கி விடலாம்.

"யார் அந்தப் பெண் சொல்லு?"

"சர்வமானிய அக்கிரஹாரத்துப் புதுசாக வந்து குடியேறிய ஒரு தாயும் பெண்ணும் என்கிற இருவரில் பெண் இவள்."

"பெண் இவள் என்று சொல்கிற திறமையைப் பார். எங்கிருந்து வந்தவர்கள். சாத்தனூருக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம்? நமக்குத் தெரிந்த யாருக்காவது உறவினர்களா?"

"அந்தப் பெண்ணின் முகத்திலே சந்தோஷம் தாண்டவ மாடுகிறது என்று நீ சொன்னாயல்லவா?"

"ஆமாம். நினைத்தாலே எனக்கு இப்போது சந்தோஷமாக இருக்கிறது."

"உண்மை என்னவென்றால் பெண் சந்தோஷமாக இருப்பதற்கு அவளுக்கு ஒரு ஆதாரமுமே இல்லை. அவள் உண்மையில் மிகவும் துரதிருஷ்டசாலி"

"நீ ஏதோ கெட்டிக்காரத்தனமாக இட்டுக்கட்டிச் சொல்கிறாய்."

"அந்தப் பெண் அநாதையாக இருந்தால்கூட அதிருஷ்டசாலி என்று சொல்லிவிடலாம்."

"என்ன இது?"

"அவள் தகப்பனார் ஏதோ கொலைக்குற்றம் செய்ததாகச் சந்தேகிக்கப்பட்டுக் கைதாகிக் கோர்ட்டில் குற்றம் ருஜுவாகி பன்னிரண்டு வருஷம் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்."

"நிஜமாவா?"

"அது மட்டுமில்லை. அவர் ஜெயிலுக்குப் போவதற்கு முன் ஏதோ காமா சோமா என்று எப்படியோ ஏழ்மையிலும் மானமாகக் காலந்தள்ளிக் கொண்டிருந்த குடும்பம் அவர் போனபின் இங்கு சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்துக்கு வந்து சேர்ந்தது."

"அடப்பாவமே!"

"இங்கே இரண்டொருவர் வீட்டில் வேலை செய்து தாயார் காலந்தள்ள முயன்று கொண்டிருக்கிறாள்."

"நீ ஏதோ பணம் தந்து..." என்றான் ரகு.

"நீ இருந்ததால் தயங்கினாளே என்று என்னாலான உதவியை-ஒரு ஐம்பது ரூபாயை மறைமுகமாக அம்மா கேட்டாளே என்று சொல்லித் தந்தேன்."

“இந்த முகத்தில் இத்தனை சந்தோஷமா?”

“கேளு-முழுவதையும் இந்தப் பெண்ணுக்கு ஏழு வயதிலேயே திருமணம் செய்து வைத்திருந்தார்கள்.”

“அய்யய்யோ!”

“திருமணம் நடந்து இரண்டொரு வருஷங்களுக்குள்ளாகவே அவள் புருஷன் அவனுக்கு அப்போது வயது பன்னிரண்டுதான் இருக்கும். ஏதோ வண்டியில் அகப்பட்டுக் கொண்டு செத்து விட்டான்”.

“சிவ, சிவ, போதும். மேலே ஏதும் சொல்லாதே. கேட்கவே கஷ்டமாக இருக்கே!”

“இருந்தும் அந்தப் பெண்-மீனுதான் சந்தோஷமாக இருக்கப் பிறந்த பெண் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது.”

“இப்படி உன்னோடு பேசிக்கொண்டிருந்தேனானால் நான் சந்தோஷமாக இல்லை என்கிற நினைப்பே எனக்கு அற்றுவிடும்.”

“என்னோடு பேசிக் கொண்டிருக்கிறது என்ன? யாரோடு பேசிக் கொண்டிருந்தாலுமே பேசாமலிருந்தாலுமே சந்தோஷம் இல்லை என்கிற நினைப்பே போய்விடலாம். சந்தோஷம் என்பது நாமாக உண்டு பண்ணிக் கொள்வதுதானே-இருப்பதாகப் பாவித்துக் கொள்வதுதானே!” என்றேன் நான்.

ரகு பதில் சொல்லவில்லை.

●

தீபம் ஆகஸ்ட் 1966